பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

விலைரூபா 5·00

# வலம்புரி
VALAMPURI

உள்ளே →
க. பொ. த.
சாதாரணதர
மாணவருக்கான
கிறிஸ்தவம்
பகுதி 1

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 24 சனிக்கிழமை (9-9-2000) தொ. பேசி;- 3378 ஒலி: 264

★ தமிழீழ விடுதலைப் புலிகள்

# தமிழீழம் கேட்டால் பயங்கரவாதம்!

# ஈழ, பிரகடனம் செய்தவருடன் உறவு

## ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின்தலைவர் வே. பிரபாகரனுடன் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்பு வைத்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்து வரும் குற்றச்சாட்டிற்கு ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் மறுப்பு தெரிவித்துள்ளன.

இதேவேளை தமிழீழக் கொடியை ஏற்றிவைத்து ஈழத்தைப் பிரகடனப்படுத்திய முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண முதல்வர் வரதராஜப் பெருமாளுடன் அரசாங்கம் தொடர்பு வைத்துள்ளதேன் என்ற கேள்வியையுமு ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் எழுப்பியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் இருப்பதாக அரசாங்கம் பலவாறான குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகிறது. ஐக்கிய தேசியக் கட்சியை பொறுத்தவரையில் எந்தவொரு தமிழ்க் கட்சியுடனும் இரகசிய ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டிய தேவை என்றுமே ஏற்படவில்லை.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தமிழீழம் கேட்டாரேயொழிய அவர் தமிழீழத்தைப்
[ 8ஆம் பக்கம் பார்க்க]

★ புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களுக்கு

# கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்!

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இடம் பெயர்ந்துள்ள 5 ஆயிரம் பேர் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்துள்ளதாக உதவித்தேர்தல் ஆணையாளர் சேனாரத்தினா தெரிவித்துள்ளார்.

இடப்பெயர்ந்துள்ள சுமார் 25 ஆயிரம் வாக்காளர்களும் அவர்கள் இருக்கும் இடத்திலேயே வாக்களிப்பதற்கு வசதிகள் செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள மக்களில்
(8ஆம்பக்கம் பார்க்க)

★ பொதுத் தேர்தலை ஒட்டி

## பொதுத்தேர்தலை கண்காணிக்க

# முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகாட்டர் இலங்கை வருவார்?

(மொறட்டுவ)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலை கண்காணிப்பதற்காக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகாட்டர் தலைமையிலான குழுவொன்று கொழும்புக்கு வரலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கு முன்னதாக அக் குழுவின் பிரதிநிதிகள் கொழும்பு வந்து நிலைமையை அவதானிப்பார்களெனவும் அதன் பின்பே ஜிம்மிகாட்டரின் வருகைபற்றி இறுதி முடிவெடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.
(8ஆம் பக்கம் பார்க்க)

# “வலம்புரி”யின் செய்திக்கு மேஜர் மத்தக்க மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 3ஆம் திகதி படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் போது படைத் தரப்பில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை தொடர்பாக கடந்த 5ஆம் திகதிய ‘வலம்புரி’யில் வெளியான தரவுகளை மறுத்து யாழ். பாதுகாப்புத்
(8 ஆம் பக்கம் பார்க்க)

# மகாபோதி விகாரைக்குள் வைத்து ரணிலை கொலை செய்ய முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்

புகுந்த முன்னாள் இராணுவ அதிகாரிஒருவரைபொலிஸார் கைது செய்துள்ளனர்.

★ பொதுத் தேர்தலை ஒட்டி

## கூட்டங்கள் ஊர்வலங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க அரசுமுடிவு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் தொடர்பாக கூட்டங்கள், ஊர்வலங்கள் நடாத்துவதற்கும் பிரசுரங்களை வெளியிடுவதற்கும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட தடையை தற்காலிகமாக நீக்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

மட்டக்களப்புப் பகுதியிலும் நாகர் கோயில் பகுதியிலும் கடந்த 3ம், 4ம் திகதிகளில் இடம்பெற்ற மோதலின்போது தமது தரப்பில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு

● கப்டன் சுரேஸ்குமார்

(8 ஆம் பக்கம் பார்க்க)

தேசங்களில் உள்ள மக்களில்

(8ஆம்பக்கம் பார்க்க)

## இளைஞன் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கோப்பாயில் வைத்து கடந்த வருட நடுப்பகுதியில் கைது செய்யப்பட்ட மகாதேவன் தனராஜை (வயது23) சட்டமா அதிபரின் பணிப்பின் பேரில் யாழ். நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.

பிரஸ்தாப நபர் களுத்துறைச் சிறையிலிருந்து கடந்த 4ஆம் திகதி யாழ். சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ - 12)

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங் காவைக் கொலை செய்யும் நோக்குடன் துப்பாக்கியுடன் மகரபோதி விகாரைக்குள் புகுந்த முன்னாள் இராணுவ அதிகாரிஒருவரைபொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்தவாரம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

★ தேர்தல் காலத்தில்

## வன்முறையில் ஈடுபடுவோரை கண்ட இடத்தில் சுட உத்தரவு

### பொலிஸ்மா அதிபர் விடுத்தார்

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் செய்யலாமென பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் நேர்மையாகவும் நீதியாகவும் வன்முறைகளற்ற சூழ்நிலையில் நடைபெற நடவடிக்கை எடுக்கவேண்டும்

எதிர்வரும் தேர்தலை நீதியாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் சகல தரப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென பல்வேறு அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களும் தேர்தல் ஆணையாளரைக் கேட்டுக் சொண்டுள்ளனர். கொழும்பில் நேற்று நடைபெற்ற தேர்தல் ஆணையாளருடனான சந்திப்பின் போதே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது இதேவேளை தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும்வானொலி தொலைக்காட்சிகளைப் பயன்படுத்த நேர அட்டவணை தயாரித்து எல்லோருக்கும் சமமான

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## போட்டியில் இருந்து வாபஸ்

### சபாரத்தினம் ஜெயரத்தினம்

ஆகிய நான் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து வாபஸ் பெற்றுக் கொள்கின்றேன் என்பதை பொது மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

ச. ஜெயரத்தினம்

[1707]



## போட்டியில் இருந்து வாபஸ்

### சிதம்பரப்பிள்ளை இராசதுரை

ஆகிய நான் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து வாபஸ் பெற்றுக் கொள்கின்றேன் என்பதை பொது மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்

சி. இராசதுரை

[1708]



இலவச சிகிச்சையும்
மருத்துவ ஆலோசனையும்.

## New Lant Clinic

(நியூலான்ட் கிளினிக்)

### மெடிலான் ஆங்கில மருந்து நிறுவனம் அருகில்

பிரதான வீதி, சங்கானை.

**10-9-2000முதல் 10-10-2000 வரை**

M. B. B. S. டாக்டர்களினால் தினமும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை இலவச சிகிச்சையும் மருத்துவ ஆலோசனையும் பெற்றுக் கொள்ளலாம்.

[கி/778]


## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை மணிக் கூட்டு வீதி அருள்மிகு அரசடி விநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமைமு.ப.8.00 மணிக்கு 108 அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (செ)

## தமிழ்த்தினப் போட்டிகள்

சகல வலயங்களும் பங்கு பற்றும் தமிழ்த் தினப் போட்டிகள் இன்றும், நாளையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை மொழித்திறன் போட்டியும், நாளை ஞாயிற்றுக்கிழமை கலைத்திறன் போட்டியும் இடம்பெறவுள்ளது. (செ-12)

---

**எம்கட்சிமீது...,**

அவர்களுடைய ''ஜனநாயக'' செயற்பாடுகளையும் மக்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள்.

ஒட்டுமொத்தமாக மக்களுக்கு ஒரு வேடம், அரசிற்கு ஒரு வேடம், புலிகளுக்கு ஒரு வேடம் என பல வேடம் கொண்டு, எமதுமக்களின் எரியும் அரசியல் பிரச்சினையில் குளிர்காயும் இந்த விலங்கு மனிதர்களை மக்கள் இனம் கண்டு கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

---

**உலக ஆசாபாசங்கள்...**

அவரெழுத்துக்களும் ஆய்வு செய்யப்பட வேண்டியவை.

நாம் ஆத்மஜோதிக்கு விழா எடுப்பதிலும் அவருடையசிரிய கொள்கைகளைக் கடைப் பிடித்து அதற்காக வாழத் திடசங்கர்ப்பம் பூணுவதேஅவருக்கு செய்யும் நன்றிக்கடனாகும்.

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

செப்ரெம்பர் மாதம் 7-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றது.

### சங்கானை

| | |
|---|---|
| 151805 ஏ | 151917 ஏ |
| 155248 ஏ | 155248 பி |
| 155248 சி | 155249 ஏ |
| 155250 ஏ | 155335 ஏ |
| 155449 ஏ | 155449 பி |
| 155497 ஏ | 155498 ஏ |
| 155498 பி | 156022 ஏ |
| 156022 பி | 156022 சி |
| 156049 ஏ | 156049 பி |
| 156049 சி | 156049 டி |
| 156049 ஈ | 156049 எவ் |
| 157743 ஏ | 157770 ஏ |
| 157772 ஏ | 157772 பி |
| 157836 ஏ | 157836 பி |
| 157836 சி | 157836 ஜி |
| 157837 சி | 57837 பி |
| 157837 சி | 157905 ஏ |
| 157905 பி | 157905 ரி |
| 157905 டி | 157905 எவ் |
| 157905 ஈ | 157944 ஏ |
| 157944 பி | 157949 வ் |
| 157949 பி | 157950 ஏ |
| 157981 ஏ | 157981 பி |
| 157981 சி | 157981 டி |
| 158499 ஏ | 158503 ஏ |
| 158503 பி | 158672 ஏ |
| 158672 பி | 158673 ஏ |
| 158763 ஏ | 158763 பி |
| 158773 ஏ | 158795 ஏ |
| 158840 ஏ | 158840 பி |
| 158861 ஏ | 158861 பி |
| 158861 சி | 158862 ஏ |
| 158881 ஏ | 158881 பி |
| 158885 ஏ | 158886 ஏ |
| 158886 பி | 158910 ஏ |
| 158928 ஏ | 158928 பி |
| 158928 சி | 158928 டி |
| 158928 ஈ | 158946 ஏ |
| 158946 பி | 158960 ஏ |
| 158960 பி | 158964 பி |
| 158977 ஏ | 158977 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 144212 ஏ | 144212 பி |
| 144212 சி | 151955 ஏ |
| 151986 ஏ | 151986 பி |
| 151986 சி | 151986 டி |
| 152116 ஏ | 152117 ஏ |
| 155263 ஏ | 157784 ஏ |
| 157784 பி | 157784 சி |
| 158519 ஏ | 158633 ஏ |
| 158633 பி | 158646 ஏ |
| 158846 ஏ | 158846 பி |
| 158856 ஏ | 158856 பி |
| 158856 சி | 158856 டி |
| 158964 ஏ | 158970 ஏ |
| 158970 பி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 143997 ஏ | 144181 ஏ |
| 144181 பி | 147266 ஏ |
| 147266 பி | 148277 ஏ |
| 150732 ஏ | 150732 பி |
| 150732 சி | 150732 டி |
| 151780 ஏ | 152252 ஏ |
| 153398 ஈ | 153398 ஏ |
| 153398 பி | 153398 சி |
| 153298 டி | 153398 எவ் |
| 153398 ஜி | 155233 ஏ |
| 155233 பி | 155233 சி |
| 155233 டி | 155284 ஏ |
| 155292 ஏ | 155342 ஏ |
| 155342 பி | 155414 ஏ |
| 156070 ஏ | 157266 சி |
| 157266 டி | 157266 ஈ |
| 157266 எவ் | 157737 ஏ |

| | |
|---|---|
| 157737 பி | 157757 ஏ |
| 157757 பி | 157757 சி |
| 157779 ஏ | 157779 பி |
| 157859 ஏ | 157859 பி |
| 157859 சி | 157859 டி |
| 157859 ஈ | 157870 ஏ |
| 157886 ஏ | 157931 ஏ |
| 157931 பி | 157960 ஏ |
| 157974 ஏ | 158506 ஏ |
| 158506 பி | 158604 ஏ |
| 158604 பி | 158608 ஏ |
| 158608 பி | 158608 சி |
| 158608 டி | 158608 ஈ |
| 158764 ஏ | 158764 பி |
| 158814 ஏ | 158814 பி |
| 158836 ஏ | 158836 பி |
| 158845 ஏ | 158858 ஏ |
| 158858 பி | 158870 ஏ |
| 158898 ஏ | 158940 ஏ |
| 158940 பி | 158940 சி |
| 158940 டி | 158943 ஏ |
| 158943 பி | 158944 ஏ |
| 158944 பி | 158944 சி |
| 158944 டி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 147179 ஏ | 147282 ஏ |
| 147282 பி | 150445 ஏ |
| 150445 பி | 152113 ஏ |
| 155181 ஏ | 155181 பி |
| 155366 ஏ | 155366 பி |
| 155423 ஏ | 155430 ஏ |
| 155430 பி | 155462 ஏ |
| 155462 பி | 155463 ஏ |
| 155463 பி | 156068 ஏ |
| 157955 ஏ | 158739 ஏ |
| 158739 பி | 158753 ஏ |
| 158878 ஏ | 158984 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 146443 ஏ | 146443 பி |
| 146443 சி | 150355 ஏ |
| 150355 பி | 152002 ஏ |
| 152030 ஏ | 152228 ஏ |
| 152249 ஏ | 152249 பி |
| 152249 சி | 152249 டி |
| 152249 ஈ | 155209 ஏ |
| 155209 பி | 155209 சி |
| 155209 டி | 155242 ஏ |
| 155242 பி | 155244 ஏ |
| 155244 பி | 155244 சி |
| 155244 டி | 155245 ஏ |
| 155245 பி | 155245 டி |
| 155245 ஈ | 155245 எவ் |
| 155245 ஜி | 155245 எச் |
| 155245 ஐ | 155401 ஏ |
| 155401 பி | 155401 சி |
| 155401 டி | 155038 ஏ |
| 156050 ஏ | 156050 பி |
| 157705 ஏ | 157705 பி |
| 157705 சி | 157705 டி |
| 157748 ஏ | 157748 பி |
| 157748 சி | 157768 ஏ |
| 157768 பி | 157768 சி |
| 157789 ஏ | |
| 157789 பி | 157791 ஏ |
| 157791 பி | 157801 ஏ |
| 157801 பி | 157887 ஏ |
| 157887 பி | 157932 ஏ |
| 157932 பி | 157938 ஏ |
| 157953 ஏ | 157953 பி |
| 157953 சி | 157953 டி |
| 157963 ஏ | 157963 பி |
| 158498 ஏ | 156563 ஏ |
| 158563 பி | 158585 ஏ |
| 158626 ஏ | 158647 ஏ |
| 158670 ஏ | 158670 பி |
| 158716 ஏ | 158716 பி |
| 158720 ஏ | 158720 பி |
| 158723 ஏ | 158724 ஏ |
| 158796 ஏ | 158796 பி |
| 158808 ஏ | 158808 பி |
| 158808 சி | 158824 ஏ |
| 158854 ஏ | 158854 பி |
| 158887 ஏ | 158894 ஏ |
| 158894 பி | 158932 ஏ |
| 158932 பி | |

(சு)


### யாழ். வணிகர் கழக கட்டிடத்

## திறப்புவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருடம் ஆவணித்திங்கள் 25-ம் நாள் 10-09-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 09-03 மணி தொடக்கம் 10-33 மணி வரையுள்ள சுபவேளையில் இலக்கம் 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள எமது வர்த்தகர்களுக்குச் சொந்தமான கழகக் கட்டிடத்தை திறந்து வைப்பதற்கு இறையருள் கூடியுள்ளது.

அத்தருணம் அனைவரும் வருகைதந்து நிகழ்வை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

1. மங்கள வாத்தியம்
2. கழக கொடியேற்றல்
3. தேவாரம், கழக கீதம்
4. கழகக் கட்டிடம் திறந்துவைத்தல்

முதன்மை விருந்தினர்கள்

1) திரு. செ. மகாலிங்கம் (திட்டப் பணிப்பாளர், யாழ். செயலகம்)
2) திரு. வே.பொ. பாலசிங்கம் (ஆணையாளர், யாழ். மாநகரசபை)

5. மங்கள விளக்கேற்றல்
6: வரவேற்புரை

திரு. இ. சிவலிங்கம் (யாழ். வணிகர் கழக உபதலைவர்)

7. ஆசியுரைகள்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)

வண. பிதா. சூ. டேமியன் (மருத்துவ உளவியலாளர், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்]

8. தலைமையுரை
9. சிறப்பு விருந்தினர் உரைகள்
10. முதன்மை விருந்தினர் உரைகள்
11. நன்றியுரை

கழகச் செயலாளர்.

தலைவர், செயலாளர்,
நிர்வாகசபை உறுப்பினர்கள்
யாழ். வணிகர் கழகம்

"திரை கடல் ஓடியும் திரவியம் தேடு"

(இ-780)


## கூட்டுறவு ஊழியருக்கு விசேட சுற்றுநிருபம்

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள கூட்டுறவு ஊழியர்கள் பயங்கரவாத வன்செயல்கள் காரணமாக காயமடைந்தோ அல்லது நிரந்தர வலுக்குறைவுக்குஆளாகியோ அல்லது மரணமடைந்தோ அல்லது காணாமல்போகின்ற சமயங்களில் அவர்கள் 'கூட்டுறவு சேவையில்' இருந்தால் அவர்களுக்குநட்டஈடு வழங்க வேண்டுமென கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

இச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

45/99ம் இலக்க சுற்று நிருபத்தில் கடமையில் இருக்கும் போது என்ற பதம் இப்புதிய சுற்று நிருபமான 49ன் மூலம் 'சேவையில் உள்ளவர்களென' குறிப்பிடுகின்றது.

இச்சுற்று நிருபம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல கூட்டுறவு நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (வ-02)

## இலவச மருத்துவ சேவை

வடபிராந்திய ஸ்ரீசத்திய சேவா நிலைய இளைஞர் பிரிவினால் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில்நாளை ஞாயிற்றுகிழமை காலை8.30 தொடக்கம் 1.00 மணிவரை இலவச மருத்துவசேவைஇடம் பெறவுள்ளது.

# எம் கட்சி மீது தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்த

# மேற்கொள்ளப்பட்ட முயற்சியே பி. பி. சியின் செய்தி

## ஈ. பி. டி. பி. அமைப்பினர் சாட்டையடி

(யாழ்ப்பாணம்)

மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றுவரும் ஈ.பி.டி.பி.யின் மீதுதவறான அபிப்பிராயத்தை உருவாக்கவும் தமக்கு நிச்சயமாக ஏற்படவிருக்கும் தோல்வியை நியாயப்படுத்தவும் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கை இதுவாகும். இத்தகைய செயலை ஈ.பி.டி.பி வன்மையாக கண்டிக்கின்றது

சில தினங்களுக்கு முன்னர் பி பி சி தமிழோசையில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து இரு வேட்பாளர்கள் விலகுவதற்கும் சுயேட்சை வேட்பாளர் வேல்முருகு தங்கராசாவிற்கும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் கொலை மிரட்டலே காரணம் என தெரிவிக்கப்பட்ட செய்தி குறித்துவிளக்கமளிக்கையிலே அக்கட்சி மேற் கண்டவாறு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இத்தகைய உண்மைக்குப் புறம்பான. அயோக்கியத்தனமான அரசியல் பிரச்சாரத்தை ஈ பி.டி.பிவன்மையாகக் கண்டிக்கின்றது. இதே வேளை இந்த உண்மைக்குப் புறம்பான செய்தியை பக்கச் சார்புள்ள முறையில் எமது தரப்பிடம் விளக்கம் எதுவும் கேட்காமல் வெளியிட்டுள்ள பி பி சி தமிழோசை சேவைக்கும் எமது விசனத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஈ.பி.டி.பி. எமதுமக்களின் அரசியல்பிரச்சினைக்குகெளரவமான தீர்வைப் பெற்றுக் கொள்ள கடந்தஒருதஸாப்தகாலமாக ஜனநாயக வழியில் போராடி வருகின்றது. எமது மக்களுடைய பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள்வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசத்தில் எமக்கென விசேட அதிகாரங்கள் கொண்ட சுயாட்சி முறையுள்ள அதிகார அலகை கௌரவமான நிரந்தரமான தீர்வாக முன்வைத்துள்ளது. அதற்காக கட்டம் கட்டமாகப் போராடியும் வருகின்றது.

அதேவேளை, இவ் அரசியல் தீர்வு எட்டப்படும் வரை தொடரும் யுத்தத்தினால் இயல்பு வாழ்வு சிதைந்து போயுள்ள எமது மக்களிற்கு எமக்குள்ள அதிகாரங்களையும், எமக்குள்ளபேரம் பேசும் ஆற்றலையும் பயன்படுத்தி அவர்கள் முகம்கொளும் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டும் வருகின்றோம், எமது மக்கள் துன்பப்படும் வேளைகளில், அதாவது எமது தேசத்தில் யுத்தம் மூண்ட வேளைகளில் எமது மக்கள்இருப்புக்களை இழந்து அகதிகளாகிய போதும் கூட எமது மக்களை விட்டு ஓடி ஒளிந்து விடாது எமது அலுவலகங்களை மூடி முட்டை, முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு கொழும்பிற்கு ஓடிப்போய் நிம்மதிப் பெருமூச்சு விடாமல், என்றும் எமது மக்களோடு நின்று வருகின்றோம்.

மக்களுக்காகவேநாம் என்ற உயர்ந்த கோட்பாட்டைப் பின்பற்றி, எமது அரசியற் செயற்பாட்டை முன்னெடுத்துவருகின்றோம். இதனால், இன்று ஈ.பி.டி.பி. தமிழ் பேசும் மக்க மத்தியில் பெரும்செல்வாக்கைப்பெற்று விட்டது.

கொழும்பில் குந்தியிருந்து கொண்டு. மதில் மேற் பூனை போல் இரட்டை அரசியல் பேசும் கூட்டணிக்கும் மற்றும் தமிழ் பேசும் மக்களின் எரியும் பிரச்சினையில் பிழைப்பு நடத்த முனையும் அரசியல் கட்சிகளுக்கும் பெரும் சவாலாகவும் ஈ.பி.டி.பி. அமைந்துள்ளது.

மக்கள் மத்தியில், தமக்கு செல்வாக்கு இல்லை என்பதையும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமக்கு ஏற்படவுள்ள தோல்வியை நியாயப் படுத்தவும் ஈ பி.டி.பி. யினராகிய நாம் தொலைபேசி மூலம் கொலை மிரட்டல் விட்டதாக கூறுகின்றார்கள்.

தமிழ் மக்களுக்கு உண்மையாக விசுவாசமாகப் பாடுபடும் அரசியல் வாதிகள் இவர்களெனின், ஈ.பி.டி.பி. தான் கொலை மிரட்டல் விட்டதாக நிரூபித்துக் காட்டட்டும். கூட்டணியின் தலைமையே, மக்களுக்கு அர்ப்பணிப்பற்ற போலியான அரசியல் நடத்திக் கொண்டு இருக்கையில, அவர்கள் நாயோட்டம் ஓடித் தேடிப் பிடித்து,அவர்கள அனுபவித்த பாராளுமன்ற சுகங்களை அனுபவிக்கலாம் என ஆசை காட்டி உருவாக்கப்பட்ட வேட்பாளர்கள், தற்கால அரசியல் போக்கிற்கு எப்படி நின்று பிடிப்பார்கள்?

### மக்கள் சிந்தனைக்கு

புலிகளின் மரண அச்சுறுத்தலையும் மீறி, 1998 இல் நீங்கள் அளித்த ஆணையை ஏற்று. 10 உள்ளூராட்சி சபைகளை நாம் ஏற்றுக் கொண்டோம். மக்களின் எண்ணங்களையும் தேவைகளையும் கருத்திற் கொண்டு எமது பிரதேச அபிவிருத்திச் செயற்பாட்டை முன்னெடுத்து வந்துள்ளோம்.

யாழ். மாநகர சபை உட்பட எந்தவொருஉள்ளூராட்சி சபைகளும் மேற்கொண்டிராத அளவிற்கு எமது நிர்வாகத்தின் கீழ் உள்ள சபைகளில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தோம். இதற்காகப் பல நண்பர்களையும், தோழர்களையும் காவு கொடுத்திருந்தோம். மரணத்திற்குப் பயந்து மக்களுக்கு சேவைசெய்வதைநாம்நிறுத்தவில்லை.

மக்களைவிட்டுஓடவுமில்லை கூட்டணியைப் போல் பதவியைத் தக்கவைத்துக்கொள்ள நான்கு மாதத்துக்கொரு தடவை கூட்டங்களை நாம் கூட்டவில்லை. இதை எமது மக்கள் நன்கு அறிவார்கள். அது மட்டுமல்ல, இவர்களுக்கு வாக்களித்த மக்களின் மன வேதனையும் யாவருக்கும் புரியும்.

### வேலை வாய்ப்பு

இன்று எமது இளைஞர் சமுதாயம் முகம் கொள்ளும் வேலை வாய்ப்புப் பிரச்சினைக்கு தீர்வு காண, பல் வேறுபட்ட அழுத்தங்களை அரசிற்குக் கொடுத்து, ஆயிரக் கணக்கான இளம் சமுதாயத்தினர் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருந்தோம். ஆனால் எமது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாகச் சொல்லிக் கொண்டு எமது இளைஞர்கள் பெற்றவேலைவாய்ப்புகளை நாய்க்கு வீசிய எலும்புத் துண்டு என கூட்டணியினர் விமர்சிப்பதில் என்ன அரசியல் நியாயம் இருக்கின்றது? இன்று தொடரும் யுத்தத்தினால் மக்கள் பொருளாதார அழிவுக்குட்பட்டு வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கின்றார்கள். இக்குடும்பங்களின் வயிற்றுப் பசியினை போக்க இவ் வேலைவாய்ப்பினை வழங்குவது நாய்க்கு வீசுகின்ற எலும்புத்துண்டா? அப்படியாயின் இக்குடும்பங்களின் வறுமையைப் போக்கவும், படித்து வேலையற்றிருக்கும் இளம் சமுதாயத்தினருக்கும் உதவிட இந்தக் கூட்டணி எஜமானர்கள். முன்வருவார்களா? இவ்வாறு தான் கூட்டணியினர், சுமார் இருதஸாப்தங்களுக்கு முன்னரும், இளைஞர் சமுதாயத்தின் உணர்வுகளை மதிக்காமல், தமது சுயலாப அரசியலை நடத்த முனைந்தால் தான் இன்று எமது மக்கள், யுத்தமும் அவலமும் நிறைந்த வாழ்க்கைக்கு தள்ளப்பட்டார்கள் என்பதை யாரும் மறந்து விடப்போவதில்லை.

### நடப்பு

மேலும் தங்களிற்கு புலிகளிடமிருந்து பலமான அச்சுறுத்தல் உள்ளதாகவும் தாம் எப்போதும் அரசுக்கு ஆதரவாக செயற்படுவோம் என்றும் ஜனாதிபதிக்கு அடிக்கடி தெரிவித்துக் கொண்டு அரசிடமிருந்து சகல வசதிகளையும் கூட்டணியினர் பெற்று வருகின்றனர். அரசிடமிருந்து குண்டு துளைக்காத கார், உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் வீட்டு வசதி என அதி உச்ச பாதுகாப்பு ஏற்பாடுகளை பெற்றுக் கொண்டும், போகும் வரும் இடமெல்லாம் இலங்கைஅரசின் பதம் தாங்கிய விசேட பொலிஸாரை தம்மைச் சூழ வைத்துக் கொண்டும் தமது பாதுகாப்புக்காக நாம் வைத்திருக்கும் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்கிறார்கள். இதே வேளை அரசினது பாதுகாப்பு நடவடிக்கைகளை தாம் கண்டிப்பதாகவும் எமதுமக்களுக்குக்கூறிக் கொள்கின்றார்கள். இதே போன்று. கூட்டணியினர் இன்று, தாம் அரைகுறையான புதிய அரசியலமைப்பை நிராகரித்துவிட்டதாக மக்களை ஒருபுறம் ஏமாற்றிக் கொள்ளும் அதே வேளையில், அரசிற்கும் புலிகளுக்கும் நல்லபிள்ளை போல் நடித்தும் வருகின்றார்கள், மூத்த தலைவரும் தேசியப்பட்டியல் எம். பியுமான நீலன் திருச்செல்வமே அரசினால் முன்வைக்கப்பட்ட புதிய அரசியலமைப்பை உருவாக்குவதில் பெரும் பங்காற்றியவர் என்பதையும் மூடி மறைக்க முனைகின்றார்கள். இந்த இரட்டை நாக்குக் கொண்ட வேடதாரிகள்.

### தேர்தலிற்கு மட்டும்

தேர்தலுக்காக மட்டும் யாழ். மண்ணில் காலடி எடுத்து வைத்துள்ள கூட்டணியினர் யாழ்.மக்களுக்கும் யாழ்.மண்ணின் அபிவிருத்திக்கும் இதுவரைகாலமும் எதனைச் சாதித்தார்கள்? அரசினால் ஒதுக்கப்படும் நிதியினை இங்கு இருந்து கொண்டு எமதுமண்ணின் அபிவிருத்தி வேலைகளுக்கு செலவிட முடியாதவர்கள் கொழும்பில். உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின்வாசல் முன்னின்று சொகுசு வாகனத்திற்காக சத்தியாக்கிரகம் இருந்தார்கள். இன்றுதேர்தல் என்றவுடன் யாழ்.மண்ணில் மாதக்கணக்கில் முகாமிட்டுக் கொண்டு கதிரை ஆசையில் கனவுகொண்டு போலி அரசியல் பேசத் தொடங்கியுள்ளார்கள் இந்தகூட்டணிஆசாமிகள். இவர்களில் கூட்டணித் தலைவர் மாவை சேனாதிராசா அவர்களது சொந்த ஊரில் உள்ள மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் மற்றும் கீரிமலை நகுலேஸ்வரம் கோயில் ஆகியவற்றின் புனரமைப்புக்கும் கூட தங்களுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டநிதியில் இருந்து ஒருசதம் கூட ஒதுக்கீடு செய்யவில்லை.

மறுதலையாக எமதுகட்சிச் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எடுத்த முயற்சியை அடுத்து ஜனாதிபதி அவர்களின் விசேட நிதியில் இருந்து இவ் இரு கோயில்களின் புனரமைப்புக்காக ரூபா140 லட்சம் ஒதுக்கப்பட்டதையும் இதில் ரூபா40 இலட்சத்தினை எமது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவதாசன் நேரடியாக கோயில் நிருவாகத்தினரிடம் கையளித்ததையும் இவ்விடத்தில் நினைவுகூர விரும்புகின்றோம்.

எமக்கு எந்த ஒரு அரசியற் கட்சியின் மீதும் வசைபாட வேண்டும் என்ற எண்ணம் இடையாது. ஏனெனில்எம்மக்கள் எம்மீது கொண்டுள்ள விசுவாசம், நம்பிக்கை, ஆதரவு ஆகியவற்றை நாம்தெளிவாக அறிவோம் இருப்பினும் துரதிர்ஷ்டவசமாக கூட்டணியினர் எம மீது சேறுபூசிய நடவடிக்கைக்குநாம்பதில் வழங்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். அதேவேளை இன்றைய சூழலில்ஏனைய கட்சியினரையும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இராசி பலன்

09/09/2000
(ஆவணி 24, சனி)
ஏகாதசி-
மு. இ. 7.24வரை
உத்தராடம்-
வை 5.33 வரை
இராகுகாலம்
9. 03- 10.33
சுபநேரம் 3.03- 4.33
பரிவர்த்தன
ஏகாதசி விரதம்

**மேடம்**

தொழில் செய்யும் இடத்தில் பராட்டு, பிரயாண நன்மை, சிறுவியாதி;

**இடபம்**

தந்தை வழி உறவு, மனக் கிலேசம், காரிய நன்மை.

**மிதுனம்**

குடும்பத்தில் சிறுசச்சரவு, பொருள் வரவு, எடுத்தகாரியம் வெற்றி.

**கடகம்**

சென்ற இடத்தில் செல்வாக்கு, விருந்துபசாரம், பொருள் வரவு.

**சிங்கம்**

தொழில் முயற்சி விருத்தியுண்டு, சுவாரஷ்யம், உஷ்ண ரோகம்.

**கன்னி**

புத்திரர்களால் மனச்சஞ்சலம், பணச் செலவு, செய் தொழில் முயற்சி தாமதம்;

**துலாம்**

உறவினர் நம்பிக்கையின்மை, வாகன சுகம், காரிய விருத்தி.

**விருச்சிகம்**

பொருள் வரவு, பிரயாணம், சகோதரர் உதவி, முயற்சி பலிதம்.

**தனுசு**

வாக்கு கலகம், காரிய தாமதம், நிலைமாறுதல்.

**மகரம்**

புதியசிந்தனை, உடல் நலம், வீண் மனஸ்தாபம்.

**கும்பம்**

சயன சுகக்குறைவு, அலைச்சல், உஷ்ண ரோகம்.

**மீனம்**

பொருள் வரவு, குடும்ப சுகம், சென்ற இடத்தில் செல்வாக்கு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்


கடற்றொழிலாளர்களின்
தொழில் நேரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்
உபகரணங்கள் அதிகரித்தளவில் கிடைக்கக்கூடிய வகையில்
தடைகள் அகற்றப்பட வேண்டும்
சகல பிரதேசங்களிலும மீன்பிடிக்கவும், தரகர்களின்
ஆதிக்கத்தை இல்லாதொழிக்கவும் போராட வேண்டும்
இவை அனைத்தும் ஈடேற எம்மை ஆதரித்திடுவீர்.

X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட் + ஈரோஸ்)

# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## கிறிஸ்தவம்

### மாதிரி வினாத்தாள் - 1 பகுதி - I

ஆக்கம்: யாழ், மறைக் கல்வி நிலையம்

[கடந்த வியாழக்கிழமை தொடர்ச்சி]

எல்லா வினாக்களுகரும் விடை தருக.

21 - 40 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக

21) புனித லூக்காஸ் தனது நற்செய்தியின் அடையாளமாக அமைவது
(1) மனிதன் (2) எருது (3) சிங்கம் (4) கழுகு

22) பரிசுத்த திருச்சபையின் அறிமுகத்தை நான் பெறுவது
(1) திருமுழுக்கின் மூலம் (2) உறுதி பூசுதல் மூலம்
(3) திவ்விய நற்கருணையின் மூலம் (4) ஒப்புரவின் மூலம்

23) பழைய, புதிய ஏற்பாடுகளுக்கிடையில் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒனித்துணராக அமைபவர்
(1) இறைவாக்கினார் எலியா (2) சக்கரியாஸ்
(3) திருமுழுக்கு அருளப்பர் (4) புனித சூசையப்பர்

24) தூதுப் பணிக்கென அனுப்பப்பட்ட அப்போஸ்தலர் பன்னிருவருக்கும் கிறிஸ்து அதிகாரங்களைக் கொடுத்தது
(1) அலகைகளைத் துரத்துவதற்காகும்
(2) நோயாளரைக் குணப்படுத்துவதற்காகும்
(3) இறை அரசை அறிவிப்பதற்காகும்
(4) மேற் கூறிய அனைத்திற்காகும்

25) புனித லூக்கா சிரியா தேசத்து அந்தியோக்கியாவில் பிறந்தவர் என
(1) இரனேயுஸ் எழுதி வைத்துள்ளார்
(2) எவசேயுஸ் எழுதி வைத்துள்ளார்
(3) அகுஸ்தீனார் எழுதி வைத்துள்ளார்
(4) இக்னேசியஸ் எழுதி வைத்துள்ளார்

26) அப்போஸ்தலன் என்பதன் பொருள்
(1) ஊழியன் என்பதாகும் (2) பின்பற்றுபவன் என்பதாகும்
(3) அனுப்பப்பட்டவன் என்பதாகும் (4) சீடன் என்பதாகும்

27) இறைவன் மிக ஆழமான முறையில் தம்மை எமக்கு வெளிப்படுத்தியது
(1) மோயீசன் மூலமாகும் (2) யாக்கோபு மூலமாகும்
(3) கிறிஸ்து மூலமாகும் (4) பவுலின் மூலமாகும்

28) பெண்களிடம் பிறந்தவர்களுள் மேலானவர் யார்?
(1) சலமோன் அரசன் (2) ஆதிப்பிதாப்பிதா ஆபிரகாமுக்கு
(3) இறைவாக்கினர் எலியாசுக்கு (4) அருளப்பருக்கு

29) உங்கள் செல்வம் எங்குள்ளதோ அங்கே எது இருக்கும்
(1) முடிவும் (2) உள்ளமும் (3) வாழ்வும் (4) மாளிகையும்

30] சிறுவயதில் இருந்தே தன் ஆன்மீக வாழ்வை பெரிதாக எண்ணி சுத்த கருத்துடன் துறவற வாழ்வு வாழ்ந்தவர்.
(1) புனித இக்னேசியஸ் (2) புனித சவேரியார்
(3) புனித வின்சன் டிபோல் (4) புனித அலோசியஸ் கொன்சாகா

31] இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை நடத்திய திருத்தந்தையர்கள்:
(1) 23 ஆம் அருளப்பரும் 1 ஆம் சின்னப்பரும்
(2) 23 ஆம் அருளப்பரும் 6 ஆம் சின்னப்பரும்
(3) 6 ஆம் சின்னப்பரும் 1 ஆம் அருள் சின்னப்பரும்
(4) 6 ஆம் சின்னப்பரும் 2 ஆம் அருள் சின்னப்பருமாகும்

32] முதற் பாவத்தில் இருந்து எம்மை மீட்டு இறைவனின் பிள்ளைகள் ஆக்கும் திருவருட் சாதனம்.
(1) ஒப்புரவாகும் (2) நோயில் பூசுதல் ஆகும்
(3) நற்கருணையாகும் (4) திருமுழுக்கு

33] தூய கருத்து என்பது.
(1) தூய வாழ்வொன்று வாழ்வதாகும்
(2) இறைவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவது
(3) அயலவரை அன்பு செய்வதாகும்
(4) ஏழைகளுக்கு இரங்குவதாலாகும்

34] ''பேராசை'' எனும் பாவம் என்பது.
(1) உரியதற்கு அதிகமாக கீர்த்தியைத்தேடுவதாகும்
(2) தேவைக்கு அதிகமாகப் பணத்தைச் சேர்ப்பதாகும்
(3) இறைவனை நிந்திப்பதாகும்
(4) அயலவரின் வாழ்க்கையை இகழ்வதாகும்

35] "'உழைக்க மனமில்லாதவன் எவனும் உண்ணலாகாது'' என புனித சின்னப்பர் யாருக்குக் கூறினார்.
(1) கொலோசியருக்கு (2) உரோமையருக்கு
(3) தெசலோனிக்கேயருக்கு (4) கொரிந்தியருக்கு

36] மோயீசனின் சட்டங்களை நுணுக்கமாக கடைப்பிடித்த ஒரு யூதன்
(1) திருமுழுக்கு அருளப்பர் (2) இராயப்பர் பேதுரு
(3) சின்னப்பர் பவுல் (4) முடியப்பர் ஸ்தேவான்

37) திருவழிபாட்டின் மிக உயர்ந்த சந்தர்ப்பமாய் அமைவது:
(1) இறைவார்த்தை வழிபாடு (2) திவ்விய நற்கருணை வழிபாடு
(3) மாலை ஆராதனை (4) திருப்பலிப் பூசை

38) இவ்வுலகில் இறையரசின் அதிமேன்மையான அடையாளமாய் அமைவது
(1) கிறிஸ்து (2) பரிசுத்த கத்தோலிக்க திருச்சபை
(3) பங்குக்குடும்பம் (4) கிறிஸ்தவக்குடும்பம்

39) திருப்பலியில் காணிக்கை பவனியில் கட்டாயமாக இருக்க வேண்டிய காணிக்கைகளாவன:
(1) பழங்கள், காய்கறிகள், உணவுவகைகள்
(2) மலர்கள், சந்தனக்குச்சி, நன்கொடை
(3) அப்பம், இரசம், சிலுவை
(4) அப்பம், இரசம், நன்கொடை

40) பரிசுத்த திருச்சபையின் ஒரே நோக்கம்:
(1) பாவிகளை மனஸ்தாபப்பட அழைப்பதற்கு
(2) திருவழிபாட்டில் ஈடுபடுத்துவதற்கு
(3) பிள்ளைகளை மறைக்கல்வி கற்பிப்பதற்கு
(4) நோயாளருக்கும் அனாதைகளுக்கும் பணிபுரிவதற்கு

# அம்மன் கவசம் ஒலிநாடா வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் துரையர் இயற்றி இசைச் செல்வர் எஸ். ஆர். தர்ஷனன் வழங்கிய அம்மன் கவசம் ஒலிநாடா வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி ப. 2.30 மணிக்கு சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செஞ்சொற் கொண்டல் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக, யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ. பாலச்சந்திரன் கலந்து கொள்கிறார்.

இவ்விழாவில் கலாபூஷணம் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் ஆசியுரையையும், யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் என். வி. எம். நவரெட்ணம் வெளியீட்டுரையையும்,

உதவிக்கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க. சிவாஜி ஆகியோர் வாழ்த்துரையையும், இசை ஆசிரியர் பொன். ஸ்ரீவாமதேவன் ஆய்வுரையையும், நிகழ்த்துகிறார்கள்.

திருமதி ம. திருச்சிற்றம்பலம், கோ. சி. வேலாயுதம், சி.சிவஞானராஜா, எஸ்.ஆர். தர்ஷனன் ஆகியோரும் உரை நிகழ்த்தவுள்ளார்கள். (செ)

# யாழ்.தேசியகல்வியியல் கல்லூரிக்கென 5ஆயிரம் நூல்கள் சேமிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரியினால் கடந்த வாரம் நடத்தப்பட்ட நூலகவாரத்தின்போது 5ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் ஆங்கில நூல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிய வருகிறது.

தற்போது மருதனாமடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் இயங்கிவரும் யாழ்ப்பாணக் கல்வியியல் கல்லூரியில் அதற்கான நூலகம் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும்எனவும் அறியப்படுகிறது.

வலிகாமம், வடமராட்சி, தீவகம் பிரதேசங்களில் இருந்து பொதுமக்கள், மற்றும் பொது அமைப்புகளும் நூல்களை அன்பளிப்புச் செய்திருந்தன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, யாழ். மறைக்கல்வி நிலையம், புளொட், ஈ.பி.டி.பி.மானிப்பாய்பிரதேச சபைமற்றும் ஜீரீசற்போன்றவைகளும்கணிசமான நூல்களை வழங்கியிருந்தமைகுறிப்பிடத்தக்கதாகும்.

நூலகவாரத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் மருதனாமடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நூல்கள் கண்காட்சியும் நடத்தப்பட்டது. இக்கண்காட்சியை3 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களும்பொது மக்களும் பார்வையிட்டுள்ளனர். (க-77)

# காரைநகர் மீனவர்களிற்கு சுழற்சி முறை கடனுதவி

(வண்ணார்பண்ணை)

காரைநகர் மீனவர்களில் 66 பேருக்கு 5 இலட்சம் பெறுமதியான வலைகளுக்கு நிதி உதவி சுழற்சி முறை கடன் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடனுதவியை ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய புனர்வாழ்வு, புனர் அமைச்சு அபிவிருத்தித்திட்டப்படி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் கடந்த இரண்டரை வருடங்களுக்குள் 159 மீனவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

இதனால் மேலும் நிதியுதவியினைப் பெறுவதற்கு பல மீனவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

இந்நிதியினை காரைநகரில் உள்ள சிவகௌரி, அம்பாள், வேரப்பிட்டி, ஊரி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சங்கங்களுக்குப் பிரித்து வழங்கப்படவேண்டுமென அண்மையில் நடைபெற்றஊர்காவற்றுறை பிரதேச கடற்தொழில் ஒன்றிணைப்பு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-109]

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில் நுட்ப நிறுவனம் 2000ஆம் ஆண்டுக்கான மாணவர்களின் இறுதிப் பரீட்சைக்கு சகல வருடகற்கைநெறி மாணவர்களிடமிருந்தும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பத்தினை நிறுவன அலுவலகத்தில் பெற்று நாளை 10ஆம் திகதிக்கு முன்பாக அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். [த - 109]

# வைத்திய அதிகாரி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தில் ஆலய வீதிகளில் முருகன் அடியார்களால் கைதவறவிடப்பட்ட பொருட்களில் இதுவரை உரியவர்களிடம்ஒப்படைக்கப்படாத பின்வரும் பொருட்கள இல.107, கண்டிவீதி, சுண்டுக்குளியிலுள்ள யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரிஅலுவலகத்தில் உள்ளன.

சையிக்கிள், மோட்டார் சயிக்கிள் திறப்புக்கள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கைக்கடிகாரங்கள், தாளம், காற்சங்கிலி, சாறிக் கிளிப், இல்வர் றே, கிலிற் ஆபரணங்கள், வீட்டுத் திறப்புக்கள், அடையாள அட்டைகள், பணமுடிச்சுக்கள், தங்கமோதிரம், தங்கத்தோடு.

மேற்படி பொருட்களுக்குரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக்காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாமென யாழ். மாநகர சபை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். [க]

# இலவச கண்சிகிச்சை

(புலோலி)

வடமராட்சி லயன்ஸ்கழகத்தின் இலவச கண்சிகிச்சையும் பொது மருத்துவ சிகிச்சையும் நாளை 10 ஆம் திகதி நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ்கலவன் பாடசாலையில் நடைபெறுகின்றது.

சிகிச்சைகளைப்பெற விரும்புவோர்கள் வடமராட்சி லயன்ஸ்கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் செயலாளர் எம். தர்மலிங்கம் கேட்டுள்ளார். [52]

# பயிற்சி வகுப்பு ஆரம்பம்

[தொண்டைமானாறு]

வடமராட்சி வலயக்கல்வித்திணைக்களமுறைசாராப் பிரிவினர் அண்மையில் தையல் பயிற்சி வகுப்பொன்றினை ஆரம்பித்துள்ளனர்.

கெருடாவில் இ.த.க. பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பயிற்சி வகுப்புகளில் பல யுவதிகள் பயிற்சி பெறுகின்றனர். [த-115]

### இன்று ஒரு தகவல்

## இன்னா செய்தாரையும் இனியவை கூறி திருத்த வேண்டும்

ஞானி ஒருவர் ஒரு நாள் இரவு நேரத்தில் வீதியால் வந்து கொண்டிருந்தார். வழியில் ஒரு குடிகாரன் ஓர் இசைக் கருவியால் வீதியால் சென்று கொண்டிருப்பவர்களை அடித்துக் கொண்டிருந்தான்.

ஞானி அவனருகில் செல்ல கையில் வைத்திருந்த இசைக் கருவியால் அவரது தலையில் ஓங்கி அடித்தான். இதனால் ஞானியின் மண்டையில் இரத்தக் காயம் ஏற்பட்டது. அவனது இசைக் கருவியும் இரண்டாக உடைந்து விட்டது.

இவ்வளவு நடந்தும் அந்த ஞானி ஒன்றும் பேசாமல் தலையைப்பிடித்துக்கொண்டு போய்விட்டார்.

மறுநாள் அந்த ஞானி தனது உதவியாளர் மூலமாக அந்தக் குடிகாரனுக்கு கொஞ்சம் பணத்தை அனுப்பி வைத்தார்.

ஞானியின் உதவியாளர் குடிகாரனுக்கு பணத்தைக் கொடுத்தார். குடிகாரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்ன விஷயம் என்று கேட்டான் குடிகாரன்.

உடனே ஞானியின் உதவியாளர் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அந்தக் கடிதத்தை ஞானி எழுதியிருந்தார். அதில் ''உங்களுடைய இசைக் கருவி உடைவதற்கு எனது தலை காரணமாக இருந்தது. அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன் நான் அனுப்பியிருக்கும் பணத்தில் புதிதாக ஓர் இசைக்கருவியை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று எழுதப்பட்டிருந்தது.

இதைப் படித்த குடிகாரன் வெட்கித் தலை குனிந்தான்.

சிறிது நேரத்தில் தன் நண்பர்கள் சிலரை அழைத்துக் கொண்டு அந்த ஞானி இருக்கும் இடத்திற்குச் சென்றான்.

அவரிடம் தான் முறைகேடாக நடந்து கொண்டமைக்காக மன்னிப்புக் கேட்டான்.

ஐயா பெரியவரே! உங்களுக்கு நான் தீங்கிழைத்தும் அதை நீங்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் எனக்கு நன்மை செய்தீர்கள். உங்களது இந்தச் செயலால் நான் திருந்தி விட்டேன். நான் செய்த இந்தப் பாவச் செயலைமன்னித்து விடுங்கள். என்று அவரிடம் மன்னிப்புக் கேட்டு மனம் திருந்தி வாழ்ந்தான்.

எமக்கு தீங்கே செய்தவனாய் இருந்தாலும் அவனுக்கு திருந்த ஒரு முறை சந்தர்ப்பம் வழங்க வேண்டும்; அச்சந்தர்ப்பத்தில் அவன் திருந்துவதற்கான வழியினையும் காட்ட வேண்டும். (த)

## ஈ.பி.டி.பி. அமைப்பினருக்கு சீமெந்து ஊழியர் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறை சீமெந்துக் கூட்டுத்தாபன அனைத்து ஊழியர்களுக்கும் அரசினால் அறிவிக்கப்பட்ட 600 ரூபா சம்பள உயர்வினை பெற்றுத் தந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருக்கு சீமெந்துப் பொதுத் தொழிலாளர் யூனியன் தொழிலாளர் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

சம்பள உயர்வு கோரி மேற்படி தொழிலாளர்கள் யாழ். கன்னாதிட்டி காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபன அலுவலகம் முன்பாகவும் உரும்பிராய் கொங்கிறிற் பகுதி முன்பாகவும் மேற்படி ஊழியர்கள் மறியல் போராட்டம் நடத்தி வந்ததமை ஏற்கனவே தெரிந்ததே. (க)

## பெற்றோல் நிலையத்தில் தீவிபத்து விசாரணைகள் துரித கதியில்

(கண்டி)

அக்குறணை 7 வது மைல் கல்லுக்குள் அருகில் உள்ள பெற்றோல் நிலையம் நேற்று அதிகாலை வேளை தீப்பற்றிக் கொண்டது. [illegible] கொண்டு வந்தனர்.

எனினும் சேதவிபரம் எதுவும் தெரியவரவில்லை.

இவ் அனர்த்தம் குறித்த விசாரணைகள் துரித கதியில் முடுக்கி விடப்பட்டுள்ளன.

### இலங்கை செஞ்சிலுவை

# வைத்தியசேவை இடை நிறுத்தம் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் வைத்தியசேவை நிறுத்தப்பட்டமை குறித்து பொதுமக்கள்தரப்பில் பலத்த அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

கடந்தசில மாதங்களுக்கு முன் இச்சேவை இடைநிறுத்தப்பட்டது.

கடந்தமாதம் 15 ஆம் திகதி இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்கூட்டத்தில் இதுவிடயம்தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்பட்டபோதும் இதுவரை உரியநடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதுபற்றி கருத்துத்தெரிவித்த இலங்கை செஞ்சிலுவைச்சங்கதலைவரும் பேராசிரியருமான வி. கே. கணேசலிங்கம் தாம் சேவைகள் வழங்க எப்போதும் தயாராக இருப்பதாகவும் இச்சேவைகளை மீண்டும்வழங்குமாறு இடம்பெயர்ந்தமக்கள் மத்தியிலிருந்து கோரிக்கைகள் பல விடப்பட்டபோதிலும் மாகாணசுகாதாரப்பணிப்பாளரின் அனுசரணை இன்றி எதுவும் செய்யமுடியாதுள்ளதாக தெரிவித்தார்.

இதே வேளை இடம்பெயர்ந்த முகாம்களில் தொற்றுநோய்களால் மக்கள் பெரிதும் துன்பப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. [க-3]

### கோப்பாயில்

## தேர்தல் பிரச்சாரங்கள் துரித கதியில்

[கோப்பாய்]

கோப்பாய்ப் பகுதியில் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் களை கட்டி நிக்கின்றன.

இருபாலைச் சந்தியில் இரண்டு கட்சிகளின் பதாதைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கட்சியும் நடைபெறவுள்ள தேர்தலில் தமது செயற்பாடுகள் பற்றிய பிரச்சாரங்களை பொது இடங்களிலும், ஆலயங்கள், பொது வைபவங்கள், மக்கள் கூடும் ஒழுங்கைப் பகுதிகளில் பரவலாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் பல கருத்து மோதல்களும் சிலபகுதிகளில் இடம்பெறுவதையும் காணக் கூடியதாகவுள்ளது. [த-79]

## அனலைதீவு வைத்தியசாலைக்கு வைத்தியர் நியமிக்கப்படவில்லை

### பொதுமக்கள் விசனம்

[ஊர்காவற்றுறை]

அனலைதீவு வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படாததனால் பொதுமக்கள் பெரும் சிரமத்தினை எதிர் நோக்குகின்றனர்.

இப் பிரதேசத்தில் இரண்டாயிரத்து முந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள வசித்த போதிலும், இதுவரைகாலமும் வைத்தியர் நியமிக்கப்படாததனால் நோய்க்கானாகும் மக்கள் உடன் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியாமல் தவிக்கின்றனர்.

இப்பிரதேச மக்கள் வைத்திய சிகிச்சை பெற்றுக் கொள்ள ஊர்காவற்றுறை வைத்திய சாலைக்கு அல்லது யாழ். போதனா வைத்திய சாலைக்கு செல்ல வேண்டியுள்ளதாக பொதுமக்கள் மத்தியில் பலத்த விசனம் தெரிவிக்கப்படுகின்றது. [சே-75]

## இளைஞன் கைது

(கொழும்பு)

களுத்துறைச் சிறையிலுள்ள கைதியைப் பார்க்கச் சென்ற தமிழ்இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் கடந்தவாரம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த இராஜேந்திரம் என்றழைக்கப்படும் கிருஸ்ணபிள்ளை மகேந்திரன் என்பவரே கைது செய்யப்பட்டவராவார். ந)

## ஐ. தே. கட்சி வேட்பாளர் உண்ணாவிரதம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி அலுவலகமொன்று எரிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காத்தான் குடி ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் முகமது மசூர் நேற்று முன்தினம் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் [illegible]

### நெடுந்தீவுப் பிரதேசத்தில்

## கால்நடைகளை வெளியிடங்களிற்கு கொணடுசெல்வதில் புதிய நடைமுறை

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவுப் பிரதேச கால் நடைகளை அங்கிருந்து வெளியிடங்களிற்கு கொண்டுசெல்வதற்கு, நெடுந்தீவு கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தில் அனுமதி பெற வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் இருந்து அதிகளவு கால்நடைகள் வெளியேற்றப்படுவதைத் தடுப்பதற்கும், வெளியே கொண்டுசெல்லும் கால் நடைகளை நியாயமான விலையில் சந்தைப்படுத்துவதற்காகவுமே இவ்ஒழுங்கு முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-75)

## கொப்பியை வீசி எறிந்தாராம் ஆசிரியர் புண்பட்ட நிலையில் மாணவி

கல்லுவகுள் அருகில் உள்ள பெற்றோல் நிலையம் நேற்று அதிகாலை வேளைதீப்பற்றிக் கொண்டது.

இரு தீயணைப்பு வாகனங்கள் சகிதம் உடன் விரைந்த தீயணைப்பு வீரர்கள் தீயினைக் கட்டுப்பாட்டில்

இவ் அனர்த்தம் குறித்த விசாரணைகள் துரித கதியில் முடுக்கி விடப்பட்டுள்ளன.

சதிமுயற்சி காரணமாக இருக்கலாமென்ற கருத்து பரவலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-உ]

பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களே எரித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. [த]

## இலங்கை நிர்வாகசேவையில்

# வகுப்பு 2 தரம் 2 இற்கு நியமிப்பதற்கு கிராம அலுவலரின் தரம் 1.சேவை அவசியம்

(யாழ்ப்பாணம்)

திறமையின் அடிப்படையில் பதவி உயர்த்துவதன்மூலம், இலங்கை நிர்வாகசேவை வகுப்பு 2 தரம் 2க்கு நியமிப்பதற்கு கிராமசேவையாளரின் அதிசிறப்புதரம், கிராம சேவையாளர் தரம் 1 சேவையும் சேர்க்கப்படவேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்று கடந்த 18.08.2000ல் இடம்பெற்ற குறைகேள் செயலமர்வின்போது கிராம சேவையாளர்களின் தூதுக் குழுவினரால், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்கப்பட்டது.

கிராமஅலுவலர் சேவையில்உள்ளவர்களுக்கு 58 வயதுவரை மட்டுமே சேவை நீடிப்பு வழங்கப்படுகிறது. ஏனைய அரசஊழியர்களைப் போன்று 60 வயதுவரை சேவைநீடிப்பு வழங்கப்பட வேண்டும்.

பொதுநிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் கிராம சேவையில் உள்ளவர்களுக்கும் சம்பளஉயர்வு வழங்கப்படவேண்டியது அவசியம்.

கிராம அலுவலர்சேவையில் தரம் 1 க்கான பதவிஉயர்வு தொடர்பாக மார்ச் 94 இல் நடைபெற்ற போட்டிப் பரீட்சைமூலம் 18 வெற்றிடங்கள்மட்டுமே நிரப்பப்பட்டன.

மேற்படி போட்டிப் பரீட்சைப்புள்ளிகள் அடிப்படையில் ஏனைய வெற்றிடங்களை நிரப்ப தகுதியானவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்எனவும் மேலும் அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## திறப்புவிழா

(தொண்டைமானாறு)

தொண்டைமானாற்றில் பொன்னொளி ஐக்கிய இலவச வாசிகசாலையினதும், பாலர்பாடசாலையினதும் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

இப்புனரமைப்புப்பணிகள் ஜீ. ரி. சற்நிறுவனத்தின் ஆதரவுடன் நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-115)

## ஜீ. ரி. சற் நிறுவனத்தின் வீடமைப்புப்பணி

(தொண்டைமானாறு)

தொண்டைமானாற்றுப் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற யுத்தஅனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் குடும்பங்களிற்கு 21 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவ் வீடமைப்புத்திட்டப் பணிக்கு ஜீ. ரி. சற் நிறுவனம் பெரிதும் உதவிகளைவழங்கியுள்ளது. (த-115)

# புண்பட்ட நிலையில் மாணவி

## கரவெட்டிகல்விநிலையத்தில்சம்பவம்

(துன்னாலை)

இருபது ஒற்றைக் கொப்பியில் பாடக் குறிப்புக்களை மாணவி ஒருவர் எழுதிக் கொண்டிருந்ததைக் கண்ட ஆசிரியர் அக் கொப்பியை பிடுங்கி எறிந்துள்ளார்.

கரவெட்டி நெல்லியடிப் பகுதியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிலேயே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: தற்போதைய சூழ் நிலை காரணமாகவும் குடும்பச் சூழ் நிலை காரணமாகவும் பிரஸ்தாப மாணவி இருபது ஒற்றைக் கொப்பியில் குறிப்புக்களை எழுதியதாகவும், அப்படி இருபது ஒற்றைக் கொப்பியில் குறிப்பெழுதியது பிடிக்காத சம்பந்தப்பட்ட ஆசிரியர் அக் கொப்பியை தூக்கி எறிந்ததும் அல்லாமல் மாணவர்களுக்கு மத்தியில் அம் மாணவியைக் கேலியாகவும் ஏசியுள்ளார்.

இச் சம்பவம் குறித்து பெற்றோர் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (செ -41

## ஊர்காவற்றுறையில்

# போரூட் நிறுவன அனுசரணையுடன் பாலர் ஆசிரியர் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

போரூட்நிறுவனத்தின் அனுசரணையுடன்பாலர் ஆசிரியர்கள் கண்காட்சி ஒன்று இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை மரியாள் மகளிர் பாடசாலையில் நடைபெறுகின்றது.

தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் இக் கண்காட்சியில் பாலகர்களின் கற்பித்தல் முறைகள் பற்றியும் அவர்களை எவ்வாறு அணுகவேண்டும் என்பது பற்றியும் விளக்கம் அளிப்பதே நோக்கம் என்று கண்காட்சி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (செ-12)

# நடிகர் ராஜ்குமார் விவகாரம்

# உதவி செய்ய அரச படைகள் தயார்

## சிரேஷ்ட அமைச்சர்கள் தெரிவிப்பு

(புதுடில்லி)

கன்னட நடிகர் ராஜ்குமார் விவகாரத்தை முடிவிற்குக் கொண்டுவருமாறு தமிழக, கர்நாடக அரசுகள் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்தால், அது குறித்து உதவி செய்ய மத்திய அரசு என்றும் தயாராக உள்ளதாக மத்திய அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் இருவர் உறுதிபடத் தெரிவித்தனர்.

இது குறித்து உள் துறை இணை அமைச்சர் ஜதிஸ் சுவாமி, நிதி இணை அமைச்சர் தனஞ்செயகுமார் ஆகியோர் கூட்டாகத் தெரிவிக்கையில்:

அவசியம் ஏற்பட்டால் துணை இராணுவப்படையை அனுப்பவும் மத்திய அரசு தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

மாற்று ஏற்பாடுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதற்கிடையில் தமிழக முதல்வர் மு. கருணாநிதி, கர்நாடக முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணா ஆகியோர் நேற்று இது விடயம் குறித்து பேச்சு நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நடிகர் ராஜ்குமாரை விடுவிப்பது சம்பந்தமாக நக்கீரன் ஆசிரியர் கோபால் பல தடவைகள் வீரப்பனுடன் பேச்சு நடத்தியும் அவ் விவகாரம் முடிவிற்கு வராமல் தோல்வியில் முடிவடைந்ததும் ஏற்கனவே தெரிந்ததே. (க)

# காஷ்மீர் தீவிரவாதிகளுடன் பேச்சு வார்த்தை வேண்டாம்

## இந்திய அரசுக்கு கோரிக்கை

[புதுடில்லி]

காஷ்மீர் தொடர்பான சமாதான முயற்சியில் தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்த வேண்டாமென்று இந்திய அரசை வெளிநாடுகளில் வாழும் காஷ்மீர்வாசிகள் கேட்டுள்ளனர்.

அவர்கள் இந்திய அரசுக்கு மேலும் விடுத்துள்ள அறிக்கையில்; ஜம்மு, லடாக் போன்ற பகுதிகளைப் பற்றி தீவிரவாதிகளின் கருத்துக் கோவைகளில் அடங்கவில்லை யென்றும் சுட்டிக் காட்டிய அறிக்கை தெரிவிக்கிறது.

காஷ்மீரிலிருந்து இடம் பெயர்ந்து பிற இடங்களில் வாழ்வோர்களடங்கிய இந்துக் குழுவே இவ்வேண்டுகோள் அறிக்கையை விடுத்துள்ளது. (து)

# இந்தியாவும் பாகிஸ்தானும் விகிதாசார இராணுவக் குறைப்பு

## பாக் அதிபர் அறிவிப்பு

[இஸ்லாமபாத்]

இந்தியாவும் பாகிஸ்தானும் விகிதாசார முறைப்படி இராணுவப் பலத்தைக் குறைப்பதை தான் விரும்புவதாக பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பெர்வேஸ் முஷாரப் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் ஜெனரல் முஷாரப் மேலும் தெரிவிக்கையில், இரு நாடுகளும் பரஸ்பரம் இராணுவ வளங்களைக் குறைக்க முன்வர வேண்டும் என்றும் அதே வேளை பாகிஸ்தானில் விரைவில் ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப்படும் என்று அவ் வேளைதாம் பதவியில் இருக்கப் போவதில்லையென்றும் அவ் வறிக்கையில் தெரிவித்தார்.

அணுவாயுதம்பற்றி அவர் குறிப்பிடுகையில் அணுவாயுத மட்டுப்படுத்தும் திட்டத்துக்கு மாறில்லை யென்றும் அவ் வறிக்கையில் ஜெனரல் முஷாரப் தெரிவித்தார். (து)

# பாகிஸ்தானிற்கு தகவல் கொடுத்த இந்திய இராணுவ அதிகாரி கைது

(புதுடில்லி)

பாகிஸ்தான் உளவுத் துறைக்கு தகவல் கொடுத்த இந்திய இராணுவ அதிகாரி கைது செய்யப் பட்டுள்ளார்:

உத்திரப் பிரதேசத்தில் வடக்குப் பகுதியில் இராமகிருஷ்ண நாயர் என்ற ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரியே, இந்திய உளவுத் துறையினரால் கைது செய்யப்பட்டவராவார்:

இந்தியாவின் முக்கிய இராணுவ கேந்திர நிலைகள் பற்றியும், யுத்த தளபாடங்கள் பற்றியும் நடமாட்டங்கள் பற்றியும் இரகசியத் தகவல் பாகிஸ்தான் அரசுக்குக் கொடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

1997 ஆம் ஆண்டு வரை இராணுவ அதிகாரியாகப் பணியாற்றிய இவர் 97 இல் இருந்து இன்று வரையும் பாகிஸ்தான் உளவுத்துறைக்கு தகவல்கள் கொடுத்து வந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஓய்வுபெற்ற இந்திய உளவுத்துறை அதிகாரிகளும் அண்டை நாட்டு இராணுவ அதிகாரிகளும் இந்திய சம்பந்தமான தகவல்களை பாகிஸ்தான் அரசுக்கு கொடுத்ததாகக்கைது செய்யப் பட்டிருந்தமைகுறிப்பிடத் தக்கது. (து)

# பாகிஸ்தான் குண்டு வெடிப்பில் 5 பேர் பலி; 20 பேர் படுகாயம்

பாகிஸ்தான் லாகூர் நகரத்தில் குண்டு ஒன்று வெடித்ததில் 5 பேர் இறந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

மேலும் இது பற்றித்தெரிய வருவதாவது: நெரிசல் நிறைந்த நகரத்தில் தசார் பகுதியில்இக் குண்டு வெடிப்பு நிகழ்ந்ததென்றும் மோட்டார் சைக்கிளில் கட்டிவைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததென்றும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே இருவர் இறந்ததாகவும் 3பேர்மருத்துவமனையில் இறந்ததாகவும் 20 பேர் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

இந்தக் குண்டு வெடிப்புக்கு எவரும் பொறுப்பேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (து)

ஐ.நா.வின்,

# மிலேனியம் உச்சிமாநாட்டில் வட-தென்கொரிய தலைவர்கள் சந்திப்பு

(சோல்)

தென்கொரிய ஜனாதிபதி கின் டேஜ், மற்றும் வடகொரிய ஜனாதிபதி கிங்ஜொங் மன் ஆகியோருக்கிடையேயான சந்திப்பொன்று இவ் வாரம் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த யூன் மாதம் இரு தலைவர்களுக்கிடையேயும் இடம்பெற்ற சரித்திரப் பிரசித்தி வாய்ந்த சந்திப்பின் தொடர்ச்சியாகவே இச்சந்திப்பு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (உ)

# உஸ்பெஸ்கிஸ்தான் அதிகாரி சிட்னியில் கைது செய்யப்பட்டார்

(சிட்னி)

ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வதற்கு சிட்னி விமான நிலையத்தில்வந்திறங்கிய உஸ்பெஸ்கிஸ்தான் அதிகாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளும் உஸ்பெஸ்கிஸ்தானிய வீரர்களடங்கிய குழுவுக்குத் தலைமை தாங்கிய அதிகாரியிடம் சட்ட விரோத மருந்துகள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்தே உஸ்பெஸ்கிஸ்தான் அதிகாரி தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டுவருகிறார்.

இதேவேளைமனிதவளர்ச்சி என்ற அந்த மருந்து வீரர்களை உற்சாகப்படுத்தக் கூடியது அதன் விளைவுகள் எப்படிப்பட்டவை என்பதுபற்றி பகுப்பாய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் சிட்னியின் ஒலிம்பிக் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## செய்திப்பரல்

★ மத்திய கிழக்கில் அமைதி நிலவ வேண்டும் என்ற கோரிக்

# கச்சாய் எண்ணெய் விலை அதிகரிப்பு

## அமெரிக்க அதிபர் பெரும் கவலை

சர்வதேச ரீதியில் கச்சாய் எண்ணெயின்விலை மும்மடங்காக அதிகரித்ததையடுத்து அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

... உரையாடுகையில் தெரிவித்தார்.

விலைக்குறைப்பை ஏற்படுத்த உதவுமாறு சவூதி இளவரசரைக் கேட்டுக் கொண்ட

கிய அதிகாரியிடம் சட்ட விரோத மருந்துகள் கைப்பற்றப்பட்டன.

இந்த மருந்துகள் மனித வளர்ச்சி என்ற பெயரில் வைக்கப்பட்ட பெட்டிகளில் அடைக்கப்பட்டு பயணப் பெட்டிகளில் அடுக்கிவைக்கப்பட்டதை அவுஸ்திரேலிய சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

தாகவும் சிட்னியின் ஒலிம்பிக் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புத்தாயிரமாண்டின் முதலாவது ஒலிம்பிக் போட்டியான சிட்னி ஒலிம்பிக் போட்டியில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொள்வார்களென்றும் மருந்து வகைகளும் ஏராளம் கொண்டுவரப்படலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தென் ஆபிரிக்க அதிபர் அறையில் உணவை ருசித்த மன நோயாளி

[கேப்டவுன்]

தென்ஆபிரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் உள்ள சமையல் அறையில் அத்துமீறி உட்புகுந்த மன நோயாளி ஒருவர் அங்குள்ள உணவு வகைகளை ருசிபார்த்தாராம்.

பொலிஸார் அவரைக் கைது செய்ய முற்பட்டபோது இது எனது வீடு, நான் சாப்பிட்டால் என்ன என்று அதிகாரிகளை திருப்பிக் கேட்டாராம்.

தென்னாபிரிக்காவின் கேப்டவுன் அதிபர் வாசஸ்தலத்தின் பின்புற ஜன்னலை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்து உணவருந்துகையிலேயே இச்சம்பவம் இடம் பெற்றது.

ஜனாதிபதி புத்தாயிரமாம் ஆண்டின் ஐ. நா. பொதுக் கூட்டத்துக்குச் சென்றதால் அந்த வாசஸ்தலத்தில்யாரும் இருக்கவில்லைஎன்றும்விசேட பாதுகாப்புகள் எதுவும் தேவைப்படவில்லையென்றும் ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதனையடுத்து சித்தசுவாதீனமுள்ள அவரை பொலிஸார் கைதுசெய்து சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

## உலக தரிசன அறிவுப் போட்டி -02

நாளைய வலம்புரியில் உலக தரிசன அறிவுப் போட்டிக்கான வினாக்கள் வெளிவரும்.

(தவற விடாதீர்கள்)

★ மத்திய கிழக்கில் அமைதி நிலவ வேண்டும் என்ற கோரிக்கையை பில்கிளிண்டன் எஹிப்ப ராக்கிடமும் யஸீர் அரபாத்திடமும் விடுத்துள்ளார்.

★ மியன்மாரின் உள்நாட்டு விவகாரத்தில் வீணாகத் தலையிடுவதாக அமெரிக்காவையும் பிரிட்டனையும் அந்நாட்டு இராணுவ அரசுகுற்றஞ்சாட்டியுள்ளது.

★ பாகிஸ்தானில் பெண்களின்உரிமையைப்பாதுகாக்க ஓர் குழுவை அந்நாட்டின் இராணுவ அரசு நியமித்துள்ளது.

★ அகிலஇந்திய வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்படாது என பிரச்சார் பாரதித் தலைமை அதிகாரிதெரிவித்துள்ளார்.

★ பாகிஸ்தானின் அத்துமீறும் எல்லை மீறல்களை ஏனைய நாடுகள் கண்டிக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

காக அதிகரித்ததையடுத்து அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

இந்த விலை உயர்வால் அமெரிக்கா மற்றும் உலக நாடுகளில் பாதிப்பு ஏற்படுமென்றும்.

ஒரு பீப்பா கச்சாய் எண்ணெயின் விலை 33 டொலர்களாக உயர்ந்ததால் பலபின்னடைவுகள் பொருளாதாரத்தில் ஏற்படும் என்றும் அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன் சவுதி அரேபிய இளவரசர் அப்துல்லாவைச் சந்தித்து

தார்.

விலைக்குறைப்பை ஏற்படுத்த உதவுமாறு சவூதி இளவரசரைக் கேட்டுக்கொண்ட அதிபர்.

இதேவேளை ஞாயிறு கச்சாய் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டத்தில் குறிப்பாக இந்த விலைகுறைப்பு பற்றி முடிவு எடுக்கப்படுமென்று கிளிங்டன் தெரிவித்தார்.

இதே வேளை எண்ணெய் விலையேற்றம் குறித்து இந்தியாவும் கவலை தெரிவித்துள்ளது. (து)

# குழந்தைகளின் நலன்பேணும் மாநாடு கனடாவில்

(ஓட்டாவா)

யுத்தநிலையினால் பாதிப்பிற்குள்ளான குழந்தைகளின் நலன்பற்றி ஆராயும் மாநாடு ஒன்று இம்மாதம் 10ம் திகதி கனடாவில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் இக்குழந்தைகளின் பாதுகாப்பு, அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தல் ஆகியனபற்றி 60 நாடுகளைச்சேர்ந்த அமைச்சர்கள் கலந்து ஆலோசிக்க உள்ளனர்.

இம்மாநாடு கனேடியன் வெளிநாட்டு அமைச்சர் 'லாயட் எட்வேடியன்' தலைமையில் நடைபெறவுள்ளது.

யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்டவர்களிலும், கனடாவில் உள்ள குழந்தைகளிலும்இருந்து 50 குழந்தைகள் இம்மாநாட்டில் தம்சொந்த சோதனைகளை தெரிவிக்கவுள்ளனர். (த)

## விசேட சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நடைபெறும் விசேட நிகழ்வுகளில் இன்று சனிக்கிழமை ''அலங்கார அமிர்தம்'' என்னும் தலைப்பில் சிவத்திரு வ. குமாரசாமி சொற்பொழிவாற்றவுள்ளார். (செ)

அறனிழுக்கா நல்லவை
நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு
- குறள் -

# வலம்புரி

## பயண அலுப்புகள்

அந்த நாட்களில் யாழ்தேவி, இன்ரசிற்றி, மெயில் வண்டி எனப்பல புகையிரதங்கள் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் பயணம் வெகு சுதந்திரமாகவும் சுகமாகவும் இருக்கும். மக்கள் வெள்ளம் தலை நகருக்குத் தம் தேவைகளுக்காச் சுதந்திரமகாப் படையெடுக்கும். ஆனால் இன்றோ ஆறுமாதங்களுக்கு மேலாகியும் அவலம் மலிந்த கியூ வரிசை, உண்ணாவிரதிகள் போல் நாட்பூரா உண்ணாது வாடிநிற்றல், இடிபாடும் நெரிசலுந் தந்த உடல் நோவோடு ஏங்கி நிற்றல், ஈற்றிலே வெறுங்கையோடு வீடுபோதல் இது தான் இன்றைய பயணப்புளச்காரம். சர்க்கரைப்பந்தல் அல்ல சிவில் அலுவலகம். தேவையின் முன்னுரிமையை மதிக்கவேண்டும் வேண்டாத தொல்லையைப் போக்கவேண்டும்.

நாட்டிலே ஜனநாயகமாக நடக்குது. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என இரு பெரும் அங்கங்கள். எதிர்க்கட்சி என்பது செம்மை நெறி இறம்பாது அரசோச்ச ஊட்டமாய் இருப்பதே. ஐயா ரணில் ஆட்சி பிடித்தால் ஆனையிறவுப் பாதை திறக்கப்படும் என்கிறார். வராவிட்டால் திறக்கப்படமாட்டாது என்பது தெளிவு. பாதை கூட அரசபோகப் பகடைக்காயாக இருக்கின்றதே பயணம்செய்யமுனைகின்ற மக்கள் கல்லிலே நார் உரிக்கிறார்கள். போதாக்குறைக்கு அரச நிழலில் குந்தியிருந்து கண்ணீர் வடிக்கிறார்கள். ஆனால் இலவச பயணமில்லை. காசு கொடுத்துத் தான் பயணம் செய்வது. அதுவும் ஒருமயில் தான். இப்படி நாட்டின் ஒரு பகுதியினர் வாடி வதங்குவதேன். மக்களுக்காக ஆட்சி என்று தொண்டை இழியக் கூறுபவர் ஒரு புறம். மக்கள் தொண்டர்கள் என்று மவுனமொழி பேசி மறுகி நிற்பவர் ஒரு புறம். இவர்கள் எல்லாம் ஒருமனதாய் நவக்கிரகங்கள் போல் வெவ்வேறுதிசைகள் நோக்காமல் ஒரு முகமாய் உரியவர்களுடன் மக்களுக்காக இறங்கி வந்து இசையக் கூடாதா? அது தானே மக்கள் சேவை.

மேற்குலக நாடுகளிலிருந்து தலைநகருக்கு வர மணிக்கணக்கிலே தான் எடுக்கும். உயிரை ஆயுதமாகக்கொண்டு உரிமைப் போர் நடத்திய பூமியிலிருந்து தலை நகருக்குப் போக மாதங்கள் செல்லும். இது யார் செய்த பாவம் ஏன் அரசு விழிப்படைகின்றதில்லை. வாக்கு வேட்டைக்காரர் உணர்வார்களா? வழி தேடுவார்களா?.

- அன்புடன் ஆசிரியர்

# மரங்களின் கீழ் மடுவம் அமைத்து வாழும்

# தமிழரின் அவலம் போக்கும் துர்க்காதேவி

இன்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய இரத உற்சவத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது. [ஆ-ர்]

தமிழ் மக்கள் இலங்கையில் வாழ்ந்தாலும் சரி பிற நாடுகளில் வாழ்ந்தாலும் சரி தம் தாய் மொழியையும் மத வழிபாடுகளையும் முன்னெடுத்துச் செல்லுவதுவழக்கம். கோயில் இல்லா ஊரில் குடியிருக்கக் கூடாது என எண்ணுபவர்கள் தமிழர்கள் தம் வாழ்வு வளம் பெறவும் உலகம் உய்யவும் எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டும் என்றும் எண்ணும் இந்துக்கள் பல கிராமங்களிலும் கோவில்களை அமைத்தமை வரலாறு. அக் கோவில்கள் தனியே வழிபாட்டுத்தலமாகவே இயங்கிவந்தன.

ஈழத்தில் கீர்த்தி பெற்ற பல ஆலயங்கள் இருக்கின்றன யாழ் குடாநாட்டிலும் புகழ் பெற்ற பல திருத்தலங்கள் உள்ளன. ஆலயம் ஒன்று அதனைச் சூழவுள்ள மக்களின் கலை கலாசார வளர்ச்சியிலும், அவர்களின் சமூக பொருளாதார உயர்ச்சியிலும், விஞ்ஞான தொழில் நுட்ப கல்வியறிவு, சூழல் மேம்பாட்டிலும் பெரும் பங்காற்றி வழிகாட்ட முடியும் என முதன் முறையாக நிரூபித்த தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தேசபக்தர்களால் பாராட்டப்படுவது சிறப்பானதே.

இன்று சைவமக்களுக்கோர் பெருவிழா துர்க்காபுரம் முழுவதும் விழாக்கோலம் பூண்டு எழுச்சியாகக் காட்சியளிக்கிறது. மங்கள தோறணங்களும், வாழை மரங்களும் பக்தர்களின் புன்னகையுடன் கூடிய பூரித்த வதனங்களும் பட்டுச் சேலைகளின் சரசரப்பும், சிறுவர்களின் மகிழ்ச்சி ஆரவாரங்களும் இதனிடையே துர்க்கையின் பக்தர்களின் 'அரோகரா அரோகரா' ஒலியும் ஆலயச்சூழலை பரவசமூட்டும் துர்க்காதேவி அம்பாள் தேரேறி வந்து தம் அடியார்க்கு நல்வரம் தரும் நல்ல நாள்.

இலங்கைத் தீவிலே முகபத்திர வேலைப்பாடுகளுடன் எண்கோணவடிவில் அமைந்த



திராவிட மரபுத் தேராக மூதன் முதலில் அமையப் பெற்றது தெல்லியூர் ஸ்ரீதுர்க்கா தேவியின் தேர் என்பது தனிச் சிறப்பாகும்.

புது மோடியான இத் தேர் வேற்றுமையான சிறப்புக்கள் விதிவிலகாது ஆக்கத்திறன் சிறப்பெய்தும் உபபீடம் தொடக்கம் அதிஸ்டானம், ஆனை தொட்டிப்பாரீ, கொடிஞ்சி, பிரஸ்தானம், விமானம் ஈறாக கலசம் வரை முகபத்திர மடக்கைகள் மீட்கப் பெற்றுள்ளமையால் சிறந்த லயச் சிறப்பு அமைந்துள்ளது.

அதிகாலையிலிருந்தே பக்தர்கள் ஆலயத்தை நோக்கி கால்நடையாகவே செல்வர். கொடித்தம்பப் பூசை முடிந்து வசந்த மண்டபப் பூசையும், அம்பாள் உள்வீதியுலாவும் முடிந்து சுமார் ஒன்பது மணியளவில் ஸ்ரீதுர்க்கா தேவி தேரில் ஆரோகணிக்கும் காட்சியைக் கண்டு மகிழ எம் இரு கண்களும் போதாது போலத் தோன்றும். பக்தர்களின் கண்களிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடும். 'தேவிக்கரோகரா' 'துர்க்கைக்கரோகரா' கோஷம் வானைப் பிளக்கும்.

''அரோகரா அரோகரா'' கோஷம் வானைப்பிளக்க பக்தர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் தேர் அசையும்போது தேரில் அமைக்கப்பட்டுள்ள நூற்றியெட்டு மணிகளும் சேர்ந்து ஒலிக்கும் மணியோசைபக்தர்களின் பஜனை ஒலியுடன் சேர்ந்து பொலிவூட்டும் பிலீப்பின்ஸ் நாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட முந்நூறு அடி நீளமான தேர் வடத்தின் ஒரு பக்கத்தில் பெண்களும் மறுபக்கத்தில் ஆண்களுமாக சேர்ந்திழுக்கும் ஆரவாரம் வேறெந்த கோவில் தேர்த் திருவிழாவிலும் காணமுடியாத சிறப்பம்சமாகும்.

தேர் விழாவின் சிறப்பை பலரும் மாறுபட்ட தம் கோணங்களில் இருந்து இயம்பினும், வாகீச கலாநிதி. கி.வா. ஜகநாதன் ஐயா அவர்களின் கருத்துமலராலும் போற்றப்படுகிறது. ''ஊரெல்லாம் கோயில், உணர்வெல்லாம் தெய்வ பக்தி, நீரெல்லாம் தீர்த்தம், நிழலெல்லாம் மண்டபங்கள், ஊரில் விழாக்கள் உயர் தெய்வம் போற்றுகின்ற சீர் விழாவே அந்த திருவிழா தம் முன்னே தேர்விழா என்றால் சிறப்பாம், பொதுமக்கள் தேரிலே கண்டு நிறையின்பம் கொள்விழா'' என மிக எளிய தமிழில் உயர்ந்த கருத்தைச் சிறப்பாக கூறுகின்றார்.

இரதோற்சவம் என்பது சங்கார உற்சவத்தைக் குறிக்கின்றது. பசுபதியாகிய சிவபெருமான் சூரிய சந்திரர்களை சில்லாகவும், மற்றும் சரம், அசரம் ஆகிய பொருள்களை ஒவ்வொரு உறுப்புக்களாகவும் நான்கு வேதங்களாகிய இருக்கு, யசூர், சாமம், அதர்வம் என்ற குதிரைகளாகவும் அமைந்த தேரில் மேருவை வில்லாகவும், விஷ்ணுவை அம்பாகவும் அக்கினியை அம்பின்கூர்வாயாகவும் கொண்டு எழுந்தருளி பிரம்மமாகிய சாரதி பிரணவமாகிய சவுக்கைக்கொண்டு செலுத்தத் திரிபுரத்தசுரர்களை தன் திருப்புன்முறுவலால் எரித்தருளினார். திரிபுர சங்காரத்திற்கு மெய்க் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் கொடுத்து தேர் உற்சவம் நடைபெறுவது இயல்பு.

**சபா. புஷ்பநாதன்**

நாளை ஆவணித் திருவோணத்தில் ''துர்க்கா புஷ்கரணி'' தீர்த்தத்தடாகத்தில் அம்பாள் தீர்த்தமாடும் அற்புதக் காட்சியைக் கண்டு பக்தர்கள் மெய்சிலிர்ப்பர். சைவமக்கள் விரதமிருந்துதேவியை வழிபட்டு, சங்கற்பம் செய்து தீர்த்தமாடும்போது அவர்தம் பாவங்கள் எல்லாம் ஒழிந்து, புண்ணிய ஆன்மாவாக இடம் பெறுகின்ற நடு நிலையை அடைவதான நம்பிக்கை வளர்ந்து வருவதை தீர்த்த உற்சவகாலத்தின் போது உணரக்கூடியதாக உள்ளது.

மரங்களின் கீழ் மடுவம் அமைத்து வாழும் தமிழர்களின் அவலம் போக்கவும் மனத்துயரால் மடியும் நிலையில் உள்ள மக்களின் துயர் துடைக்கவும் - இன்று தேரிலே பவனிவரும் துர்க்கா தேவி நிச்சயம் துணைநிற்பாள் என்று நம்புவோமாக.

# உலக ஆசாபாசங்களும் உழலாமல்


# வாழ்ந்த பெருந்தகை 'ஆத்மஜோதி'

தானும் தனது குடும்பமும் தனது பேரும் புகழும் என்று வாழாது உலகம் சேமமாக இருக்க வேண்டும் என்று அல்லும் பகலும்எண்ணி வாழ்ந்த பெருமகன் ஆத்மஜோதி நா. முத்தையா என்றால்மிகையாகாது. சாதாரண மனிதனின் வாழ்வு வளம் பெற வேண்டும். அவனும் மனிதன் அவனுடைய உள்ளத்திலும் இறைவன் அமைந்திருக்கின்றான் என்ற உணர்வு பெற்று வாழ்ந்த பெரு மனிதர் ஆத்மஜோதி.

உலக உபசாரங்களுக்குள்ளும் கௌரவங்களுக்குள்ளும் தன்னை அளவுக்கதிகமாக அமிழவிடாது எல்லாம் இவன் செயல் என்ற உயரிய உணர்வோடு வாழ்ந்த ஆத்மீகவாதி ஆத்மஜோதி தான் உண்ணும் போதும் உறங்கும்போதும் உலாவும் போதும் உணவிற்காகவும் உறையுளிற்காகவும் ஏங்கி வாழும் யாது மற்ற ஏழைச்சமுதாயத்தைச் சிந்தித்து வாழ்ந்தார்.

அவப் பொழுதைத் தவப் பொழுதாக்க வேண்டும் என்பதே ஆத்மஜோதியின் அவா. ஆத்மஜோதியின் அடியார் கூட்டத்தில் எல்லாவகையான தரப்பட்டவர்களும் கலந்து கொள்வர்.

பாடசாலையை எட்டிப்பாராத கமக்காரனையும் சாதாரண ஏழையையும் கூலிக்காரனையும் சமமாகப் பார்க்கும் ஒரு உயர்ந்த தன்மை ஆத்மஜோதியின் வாழ்வில் காணக் கூடியதாக இருந்தது. ஆத்மஜோதி ஒரு நாளாவது அர



சாங்க அதிபர் வந்துவிட்டார் என்றோ பேராசிரியர் வந்து விட்டார் என்றோ அவர்களுக்கு என்று மட்டும் ஆலவட்டம் பிடித்தது கிடையாது. எல்லோருக்கும் உள்ள ஆலவட்டத்தினும் அவர்களும் பெருமை பெற்றுக் கொள்ள வேண்டியது தான்.

ஆத்மஜோதிக்கு யாராவது மாலையோ, பொன்னாடையோ வழங்கினால் அதனைக் கட்டிக் கொண்டு வீடு செல்லும் வழக்கம் இவருக்கு கிடையாது. அருகில் யார் நிற்கிறாரோ அவரிடம் கொடுப்பார். அல்லது அவருக்கே அதனை போட்டு மகிழ்ந்து கொள்ளுவார்.

ஆத்மஜோதி அவர்கள் நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையம் சிங்களக்காடையர்களால் எரிக்கப்பட்ட பின் 1983 ல் இருந்து யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் வாழவேண்டியதாயிற்று. அக்காலப் பகுதியில் இவர் ஏற்படுத்திய பாதயாத்திரைப் பக்தி எழுச்சி இயக்கமும், திருவாசக முற்றோதல் நிகழ்வும் மக்கள் மத்தியில் நன்குபதிந்து அவை இன்றும்தொடர்வதைக் காண்கின்ற போது பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

1992 ம் ஆண்டு தமிழ்ப் பிரதேசத்தில் நடைபெற்றுவரும் போர் காரணமாகஎமதுஆலயங்கள் அழிக்கப்பட்டும் இந்துக்களில் உரிமைகள் மறுக்கப்பட்டும் இருந்த போது அதற்கெதிராகப்போர்க்கொடி தூக்கிய வீர புருஷன் ஆத்மஜோதி இன்று நடைபெறும் போரால் கைதடியில் எமது சைவச் சிறுவர் இல்லம் இயங்க முடியாது போனாலும் அவ்வில்லம் ஏழாலையில் மிகச்சிறப்பாகஇயங்கி வருவது ஆத்மஜோதியின் ஆத்மீக வாழ்வின் புனிதத்திற்கு சான்றாக அமைகிறது.

ஆத்மஜோதி அவர்கள் ரமணகாரிசி, ஸ்ரீ சத்தியசாயி பாபா, காஞ்சி காமகோடி பீடாதிபதி, சபாரத்தினச் சுவாமிகள், திருப்புகழ் சுவாமிகள், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் போன்றோருடன் அதிக ஈடுபாடுடையவராக வாழ்ந்து அவர்களிடமிருந்து மாபெரிய ஆத்மீகஅனுபவத்தைப்பெற்று அவற்றை சமுதாயத்திற்கு வெளிப்படுத்தும் ஓர் அரிய சாதனமாக ஆத்மஜோதி விளங்கினார்.

ஆத்மஜோதி நல்ல சிறந்த எழுத்தாளர் மக்கள் விளங்கக் கூடிய வகையில் சமய இலக்கியம் படைத்த பெருமை ஆத்மஜோதிக்கு உண்டு. மக்களுக்கு உதவ வேண்டும் என்ற சிந்தனை ஆத்மஜோதியின் உள்

**சி. சக்திகிரீவன்**

ளத்தில் இருந்ததால் ஆத்மஜோதி மக்களைத் தன்பக்கம் இழுக்கக் கூடிய அரிய எழுத்து யுக்தியைகையாண்டமை அவரது நூல்களைப் படிக்கும் போது கவனிக்கக் கூடியதாகவுள்ளது.

1992 ஆம் ஆண்டு ஆத்மஜோதிக்கு ஒரு பெரு விழா எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது அவர் மக்கள் அகதிகளாகத் தெருவிலே நிற்கும்பொழுது எனக்குஇவை வேண்டாம் ஏழைகளுக்கு ஏதாவது செய்ய உங்களால் முடியுமானால் செய்யுங்கள் அதுவே எனது விழாவாக அமையும் என்றுகூறிவிட்டார்.

இவ்விதம் ஆத்மஜோதியின் எச்செயற்பாட்டை எடுத்தாராயினும் அவற்றில் நாம் பல விடயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. ஆத்மஜோதியின் வாழ்வும்

(8 ஆம் பக்கம் பார்க்க

## 25ஆயிரம் ரூபா பிணையில்

(வவுனியா)

பொதுஜன ஐக்கியமுன்னணியின் ஆதரவாளரைத் தாக்கி காயப்படுத்திய ஈழமக்கள்ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் எஸ்.எம். குமாரசிங்காவை 25ஆயிரம்ரூபா சரீரப் பிணையில் செல்ல வவுனியா மாவட்ட நீதவான்எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டு மீண்டும் இம்மாதம் 25ந் திகதிமன்றில் ஆஜராகும்படி மேலும் பணித்துள்ளார்

### புலிகள்...

(ஆண்டிப்பிள்ளை ரவிச்சந்திரன்) மட்டக்களப்பு

● லெப். சண்முகன் (கைலாயபிள்ளை சண்முகம்) மட்டக்களப்பு

● 2ம். லெப் புகழ்மதி (பாலசிங்கம் கலைவாணி) கனகராயன் குளம்

# இனப்பிரச்சினை நீடிப்பதற்கு அரசியல்வாதிகளின் "ஆவேசமே" காரணம்!

## பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த பதினேழு வருடங்களாக இனப்பிரச் சினையை தீர்க்க முடியாமல் இருப்பதற்கு, அப்பிரச் சினையை தீர்க்கமாகசிந்தித்து ஆராயாமல் ஆவேசமான முறையை அரசியல்வாதிகள் கையாண்டதே காரணமாகும்.

இவ்வாறு நீதி அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற இலக்கியங்கள் மூலம் ஒருமைப் பாட்டுக்கு உதவியவர்களின் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது.

இலங்கையின் இனப்பிரச் சினையை நாம் ஆழமாகச் சிந்தித்து அதன் பிரகாரம் அதனைத் தீர்க்க முயன்றிருந்தால் அதனை இந்தளவு தூரம் நீடிக்க விடாமல் தீர்த்திருக்க முடியும்.

ஆசியாவில் இலங்கை கல்வி அறிவு கூடிய நாடாகும். கல்விக்குரிய வளங்களும் இங்கு கூடுதலாகவே உள்ளது.

எனினும் இனப் பிரச்சினைத் தீர்வில் நாம் தீர்க்கமான முடிவை இதுவரை எடுக்கவில்லை என்றும் கூறினார். (வ)

### முன்னாள்

இதேவேளை பொதுத் தேர்தலைக் கண்காணிக்க பொதுநலவாய பாராளுமன்றச் சங்கம், ஐரோப்பிய யூனியன், நியுயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்ட ஜிம்மிகாட்டர் சங்கம் ஆகியவை தயார் நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது (ந-2)

### தேர்தல்...

முறையில் நேரப்பங்கீடு செய்வதிலும் இணக்கம் காணப்பட்டது. அவசர காலச் சட்டத்தின் கீழ் கூட்டங்கள் கூட்டுவதற்கும், ஊர்வலங்கள் நடத்துவதற்கும், செய்திப் பிரசுரங்கள் வெளியிடுவதற்குமான தடைகளை அரசாங்கம் தற்காலிகமாக நீக்கியுள்ளதால் சகல அரசியல் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுக்களினதும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

### வலம்புரி...

தலைமையக அதிகாரி மேஜர் மத்தக்க 'வலம்புரி'க்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு கொழும்புத்துறை, சரசாலை, மட்டுவில், நுணாவில் போன்ற பகுதிகளில் இம்மாதம் 3ஆம்திகதி அதிகாலை முதல் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது 8 அதிகாரிகளும் 63 சிப்பாய்களும் உயிரிழந்துள்ளதாகவும் 225 பேர் படுகாயமடைந்ததுடன் சிறு காயத்திற்குள்ளான 254சிப்பாய்கள் சிகிச்சையின் பின்னர் மீண்டும் களத்திற்குச் சென்றுள்ளதாகவும் மேஜர் மத்தக்க அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ந)

### தமிழீழம்...

பிரகடனப் படுத்தவில்லை

ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி தனது தேசிய பட்டியலில் தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தியும், தேசியக் கொடியை ஏற்றிவைத்தவருமான வரதராஜப் பெருமாளுக்கு எவ்வாறு முன்னுரிமை அளித்தது என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி எழுப்பியுள்ள இக்கேள்வியை ஈ.பி. ஆர்.எல்.எவ் வரதர் அணி மறுத்துள்ளது. இம்மறுப்புத் தொடர்பாக வரதராஜப்பெருமாள்கருத்து தெரிவிக்கையில் நான் இப்பொழுது அரசியல் நீரோட்டத்தில் இணைந்து ஐக்கிய இலங்கையையே விரும்புகிறேன் இந்நிலையில் இது என்மீது சுமத்தப்படும் போலிக் குற்றச்சாட்டாகும் என்று தெரிவித்தார்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியும் இதனை மறுத்து கருத்துத் தெரிவித்துள்ளது.

வரதராஜப்பெருமாள் இப்பொழுது ஐக்கிய இலங்கையையே விரும்புவதாகவும் இந்நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு அவரை தேசியப் பட்டியலில் சேர்த்துக் கொண்டதில் எந்தவிதமான தவறும் இல்லையென்றும் பொதுஜன ஐக்கியமுன்னணி நியாயம் கற்பித்துள்ளது. (வ)

### வன்முறையில்...

அவ்வறிவித்தலில் வன்முறையில் ஈடுபடுபவர்கள் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு கட்டுப்படாது விட்டால் கண்ட இடத்திலேயே அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வறிவுறுத்தல் சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், பொலிஸ் அதிகாரிகள் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் ஆகியோருக்கும் வழங்கப்பட்டுள்ளது. (வ)

### மகாபோதி...

தெரியவருவதாவது பிரசார கூட்டமொன்றில் உரையாற்றுவதற்கு முன்னதாக மகாபோதி விகாரைக்கு ரணில் விக்கிரமசிங்கா செல்லவிருந்ததாகவும் அதற்கு முன்னதாக குறித்த முன்னாள் இராணுவ அதிகாரி துப்பாக்கி ஒன்றை இடுப்பில் செருகியவாறு விகாரைக்குள் நுழைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதனை அவதானித்த படையினர் அவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்த போதிலும் பத்தாயிரம்ரூபா குற்றப் பணத்துடன் அவரை நீதிமன்றம் உடனடியாகவே விடுதலை செய்ததாகவும் தெரியவருகிறது. (ந)

## 15ம் திகதிக்கு முன் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 15ஆம்திகதிக்கு முன்னர் ஒக்டோபர் மாதத்திற்குரிய நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட வேண்டுமென யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்துள்ளார். (க-3)

### கொத்தணி...

வாக்களிப்பதற்கு விண்ணப்பித்து இருப்பவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

### கூட்டங்கள்...

அடுத்த மாதம் 10ந் திகதி நடைபெறவுள்ள 11வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலைக் கருத்தில் கொண்டு இம்முடிவு எடுக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை மக்களை வன்முறைக்குத் தூண்டும் இராணுவச் செய்திகளை வெளியிடுவதில் உள்ள தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும். இந்நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக தகுதி வாய்ந்த அதிகாரி ஆரியருப சிங்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக அமுல் செய்யப்பட்ட பிரமாணங்கள் தொடர்ந்தும் அமுலில் இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-2)


ஸ்ரீ செல்வா
[யாழ்ப்பாணம்]
அபிமான நட்சத்திரங்கள் நடித்த
மகளிருக்காக
CD புதிய பிரதி
காட்சி நேரம்
10-30, 2-00 (ப.நே)
[இ 688]

கஜன்
திரை
ஊர்காவற்றுறை
கார்த்திக், ரேவதி ஜனகராஜ், குஷ்பு நடிப்பில்
கிழக்கு வாசல்
காட்சி நேரம்
பி.ப 2.30 மணி
(இ-652)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
அஜித்-ஷாலினி இணையும்
அமர்க்களம்
(ரீல்ஸ்)
காட்சிகள். 11.00, 2.30
(பு.நே)

உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுவோர் கவனத்திற்கு
சில தினங்களில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் கப்பல் மூலம் ஏற்ற இருப்பதால் வாடிக்கையாளர்கள் தொடர்புகொள்ளவும்.
ஜெசிபா ஏஜென்சி
132, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
T. P. 2407. (இ-779)

யா கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயத்தின் அறிவித்தல்
11-09-2000 (திங்கட்கிழமை) தொடக்கம் காலை நேரப் பாடசாலையாக கீழ்வரும் பாடசாலைகளில் இயங்கவுள்ளது என்பதை சகல மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அறியத் தருகின்றேன்.
வகுப்பு — பாடசாலை
தரம் 6 — 11 — யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை, யாழ்ப்பாணம்.
தரம் 12 — 13 — யா/சன்மார்க்க மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்.
(1711) அதிபர்

கூட்டுறவாளர்களே! தொழிலாளர்களே!
அன்றாட அவலம் நீங்கி,
உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெற்று,
சரிநிகர் சமானமாக வாழ
அளித்திடுங்கள் உங்கள் வாக்குகளை
ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சிக்கு!
(ஈ. பி. டி. பி)
வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!


சாவகச்சேரி வர்த்தகர்களது கோரிக்கையை ஏற்று அவர்களது 'உ' பங்கீட்டு அட்டைகளுக்கு உலர் உணவு வழங்க ஈ. பி. டி. பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தார்-
(இ/736)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில்2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.